மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாமக்கல்லைப்பற்றி உங்களுக்கும் தெரியும், அமைச்சருக்கும் தெரியும். நாமக்கல்லை ஒரு சுற்றுலா கேந்திரமாக அமைப்பார்களா என்று கேள்வியைக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாட்டில் பல இடங்கள் இருக்கின்றன. திருத்தலங்கள், சரித்திரப் புகழ்பெற்ற கோட்டைகள், இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி கட்டப்பட்ட கோயில்கள்—புழலேரிக்குப் பக்கத்தில் உள்ள கோயில் அதுபோன்றது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்—எல்லாம் இருக்கின்றன. எல்லாம் வளர்ச்சிபெறுகிற காலத்தில் நாமக்கல்லும் வளர்ச்சிபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

First-aid Boxes in Taxis

* 834 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the police in Madras City is aware that taxis and other public carriers do not keep first-aid boxes in their vehicles; and

(*b*) if so, the steps taken thereon ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) வாடகை வண்டிகளில் முதலுதவிப் பெட்டிகளைப் பொருத்த வலியுறுத்தப்படுகின்றனர். பொருத்த தவறியவற்றின் மீது வழக்கு தொடரப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : இது சம்பந்தமாக ஒழுங்கான செக்கிங் நடக்கவில்லை என்கிற புகார்களுக்கு இடம் கொடுக்காமல் தக்க முறையில் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருப்பதினால்தான் 1971-ஆம் ஆண்டில் 250 லாரிகளும், 35 பேருந்துகளும், 19 வாடகை வண்டிகளும் இந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

Automatic signal lights in Madras

* 835 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras City Police and made arrangements to synchronise the automatic signals at Madras City to regulate vehicular traffic; and

(*b*) if so, the details thereof?